E-ISSN: 2581-7140

# தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்*

# INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

***(IJTLLS) UGC CARE LISTED JOURNAL***
***A Bi-Yearly Peer-Reviewed International Journal***

**ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி (தன்னாட்சி), சாத்தூர்**
**தமிழ்த்துறை**

**SRI S.RAMASAMY NAIDU MEMORIAL COLLEGE (Autonomous), SATTUR**
**Tamil Department**

**சிறப்பிதழ்**

## பக்தி இலக்கியம்

## BHAKTHI LITERATURE

தொகுதி – 3, சிறப்பிதழ் 3, தொகுதி – 2 சனவரி 2021

VOLUME– 3, SPECIAL ISSUE 3, VOL – 2, JANUARY 2021

Edit with WPS Office

46 சங்க அகநூல்களில் ஆயர்களின் பக்திநிலை
**The Devotion of the Aayars in the Sangam Scriptures** 309-313
மு.தீபா / முனைவர் கோ. சாந்தி
M. Deepa / Dr. G. Shanthi

47 மாணிக்கவாசகரின் பரதுரியாதீத நிலை
**Manikkavasakar's Spiritual Transcendence** 314-319
முனைவர் அ.நஸ்ரின் / Dr.A.Nasrin

48 ஆழ்வார்கள் உணர்த்தும் பக்தியின் பாடுபொருள்
**The Objective of Devotion as Evinced by the Alvars** 320-325
பா.நாகேஸ்வரி / P.Nageswari

49 சைவ நோக்கில் ஐந்திலக்கணக் கடவுள் வாழ்த்துக்கள்
**Invocation of Gods in the Penta Grammatical Works in Saiva Perspective** 326-331
சி.பாரதி / முனைவர் இரா.வசந்தமாலை
S. Bharathi / Dr.R.Vasanthamalai

50 ஆன்மீக வளர்ச்சியில் வாரியாரின் மேடைத்தமிழ் பங்களிப்பு
**Variyar's Tamil Oratory Contribution to Spiritual Development** 332-338
ரா.சே.பாலாஜி / R.S. Balaji

51 திருமுருகாற்றுப் படையில் முருகனின் சிறப்புகள்
**Forte of Muruga in "Thirumurukaaruppadi"** 339-345
ப. பியூலா / முனைவர் நா.ரா. சிபஜா
B.Beula / Dr. N. R. Shibaja

52 பக்தி இசை வழிபாட்டில் நாதஸ்வரம்
**Nadhaswaram in Musical Bhakthi Worship** 346-350
கு. பிரகாஷ் / K. Prakash

53 ஆண்டாளும் வைணவ பக்தி நெறியும்
**Andal and Vaishnava Devotion** 351-360
முனைவர் பீ. பெரியசாமி / Dr. B. Periyaswamy

54 சிலப்பதிகாரச் சமயங்கள்
**Religions in "Silappathikaram"** 361-367
அ.மகபூபு / முனைவர் ச.முத்துவேல்
A.Mahabobu / Dr.S.Muthuvel


Edit with WPS Office

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140

Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021

UGC CARE Listed Journal

Available at: www.ijtlls.com



# சிலப்பதிகாரச் சமயங்கள்

# Religions in "Silappathikaram"

அ.மகபூபு, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

A.Mahabobu , Phd.Scholar, Tamil Department, Nalamuthu Gounder Mahalingam, College, Pollachi.

ORCiD: https://orcid.org/0000-0003-4761-4707

முனைவர் ச.முத்துவேல், தமிழ்த்துறை தலைவர், நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,பொள்ளாச்சி.

S.Muthuvel, Head, Department of Tamil Nalamuthu Gounder Mahalingam College, Pollachi.

ORCiD: https://orcid.org/0000-0001-6143-4177

DOI: 10.38067/ijtlls.2021.spl.v03i03v2.054

## Abstract

*There are many religions in Tamil Nadu during the Silappathikaram period. The Tamil people follwed many religions. Tamilians do not have hatred or bigotry due to religious differences. They live peacefully giving space to the people who follow other religions. Elangovadigal, the author of the epic has portrayed the imperial characters religion to common people's religion, the way of people lived, the religious tolerance, acceptation of truth and other virtues in other religions. This article establishes that they all lined together as Tamilians even though they followed different religions*

**Keywords:** "Silappathikaram, Religions, Tamil People, Depiction of Religions

## முன்னுரை

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை வெறும் புழச்சியில்லை என்று இளங்கோவடிகளைப் போற்றிய பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" (பாரதியார் கவிதைகள், செந்தமிழ்நாடு) என்றும் பாடியுள்ளார். இத்தகைய சிறப்புகளை உடைய முதல்காப்பியம், முத்தமிழ்காப்பியம், குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரத்தில் சமயங்களைப் பற்றிக் கூறும்பொழுது சமயச் சார்பற்ற நிலையையே பார்க்க முடிகிறது. சிலப்பதிகாரக் காலத்தில் பல சமயங்கள் இருந்தும், மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர் என்பதை நிறுவுவதாக இக்கட்டுரை அமைகிறது. சிலம்புகாலத்தில் தமிழ்நாட்டில் சைனம், சைவம், பௌதம் போன்ற பல மதங்கள் இருந்தன. நால்வகை வருணங்களான அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் போன்றவை இருந்தனர். இவ்வாறு பல மதங்களையும் பின்பற்றிய பொழுதும் தமிழ் மக்களிடையே மத வேற்றுமை காரணமாக வெறுப்போ, வெறியோ, ஏற்படவில்லை. தமிழர் என்ற முறையிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். காவிரிபூம்பட்டினத்தில் சிவன் கோவில், திருமால் கோவில், புத்தர்பள்ளி, அருகர்பள்ளி முதலிய இருந்தன என்றும், அவைகளுக்கு முறைப்படி பூசைகள் நடந்தன என்பதை,

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**



Edit with WPS Office

**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும் (சிலம்பு: இந்திர:170-175)**

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

**கவுந்தியடிகள்**

புறஞ்சேரியில் இருக்கும் சமணதுறவி கவுந்தியடிகள், கோவலன், கண்ணகியைப் பற்றிக் கூறும்போது "அழகும், குடிப்பிறப்பும், ஒழுக்கமும், இறைவன் நூலிற் கூறிய விரதந் தப்பாமையும் என்னும் இவற்றையெல்லாம் உடைய நீங்கள் தீவினையாளரைப்போல உமது இடத்தைவிட்டு நீங்கி வருவதற்குக் காரணம் என்ன?

**உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்**
**பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்**
**உடையீர்! என்னோ உறுகணாளரின்**
**கடைகழிந்து இங்ஙனம் கருதியவாறு? (சிலம்பு: நாடுகாண் :46 - 49)**

என்று கவுந்தியடிகள் கேட்டார். பெருமகன் என்பது அருகனைக் குறித்ததாகும். கோவலன், கண்ணகி இருவரும் அருகதர்மத்தைப் பின்பற்றி நடப்பவர்கள் என்பதை இதனால் காணலாம்.

கோவலன், கண்ணகி, கவுந்தி மூவரும் மதுரைப்புறஞ்சேரியிலே தங்கியிருந்தனர். அங்கே இடைச்சியர் தலைவி மாதரி வந்தாள். இடையர்கள் திருமாலை வணங்குவோர், அருகனை வணங்கும் கவுந்தி, திருமாலை வழிபடும் மாதரியின் உயர்ந்த பண்பை உள்ளத்தால் பாராட்டினார். "பசுவைக் காத்து அதன் பயனை மக்களுக்கு அளிப்போர் இடையர்கள். அவர்கள் வாழ்க்கையிலே கொடுமை என்பதே இல்லை. அக்குடியிலே பிறந்த இவள் குற்றம் அற்றவள்; பெரியவள் ; நல்லவள் ; அன்புள்ளவள். இந்த மாதிரியிடத்தில் கண்ணகியை அடைக்கலமாக வைப்பதனால் குற்றம் இல்லை என்று எண்ணினார் கவுந்தியடிகள்.

**ஆகாத்து ஓம்பி ஆபயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பாடு இல்லை;**
**தீதுஇலள்:; முதுமகள்:; செவ்வியள்:; அளியள்:**
**மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துவதற்கு (சிலம்பு: அடைக்கல:120-124)**

இதனால் கவுந்தியடிகளின் தூயஉள்ளம் பிற மதத்தினரிடம் வெறுப்புக் காட்டாத தன்மை இவற்றைக் காணமுடிகிறது

**மாதரி**

கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி கோவலனையும், அவளையும் தனது ஆயர்பாடிக்கு அழைத்துச் சென்றாள். அவர்கள் இருக்கச் செம்மண் பூசிய புதுமனை உள்ளறைக் காட்டினாள். கண்ணகியை நீராட்டினாள். தன் மகள் ஐயை என்பவளையும் பணிமகளாக அமர்த்தினாள். பின்னர் "கோவலனார் சாவா நோன்புடையார். ஆதலால் கண்ணகி பகல் உணவு சமைப்பதற்காகப் புதிய கலங்களையும் விரைவில் கொண்டுவந்து கொடுங்கள்.


Edit with WPS Office

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்**

**நாத்தூண் நங்கையொடு நாள் வழிப்படூஉம்**

**அடிசில் ஆக்குதற்கு அமைந்தநல் கலங்கள்**

**நெடியாது அளிமின் நீர்" (சிலம்பு: கொலைக்களம் : 18-21)**

என்ற வரிகளின் மூலம் கோவலன் சைனமதத்தினன் என்பதும் திருமாலை வணங்கும் ஆயர்குடிமகள் மாதரி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாத்ததையும் கோவலன் இறந்தது அறிந்ததும் மாதரி தீ புகுந்ததும் போன்ற செய்திகள் நம் மனதில் ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறாக மாதரியின் சமயசார்பற்ற நிலையை உணரமுடிகிறது.

**கோவலன்**

மாசாத்துவனின் மகன் கோவலன் சமணனாயிருந்தும் மதவெறுப்பு இல்லாதவன். எம்மதமும் சம்மதம் எனக் கொண்டான். கோவலன் வைகறைப் போதிலே புகாரை விட்டு மதுரைக்குப் புறப்படுகின்றான். புறப்பட்டவன் முதலில் மணிவண்ணன் கோவிலை வலம் செய்தான்.

**அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்து**

**மணிவண்ணன் கோட்டம் வலம்செயாக் கழிந்து (சிலம்பு:நாடுகாண் : 9-10)**

மணிவண்ணன் கோட்டம்; திருமால் கோவில். இதன்பின் புத்தர்பிரான் அறவுரைகளை அந்தரசாரிகள் வந்திருந்து சாற்றும் இந்திர விகாரங்கள் ஏழையும் வணங்கிப்போனான் என்பதை,

**...அறவோன் திருமொழி**

**அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்**

**இந்திர விகாரம் ஏழுடன் போகி (சிலம்பு: நாடுகாண் : 12-14)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

கோவலனின் சிறப்பை மாங்காட்டுமறையோன் கூறும்பொழுது, "தானம் வாங்குவதற்காக வயது முதிர்ந்த வேதியன் ஒருவன் வந்தான். அவனை மதங்கொண்ட யானை ஒன்று கைக்கொண்டது. உடனே கோவலன் பாய்ந்து அவ்வந்தணனை விடுவித்தான்" (அடைக்கல:42-43). "கீரிப்பிள்ளையைக் கொன்ற பார்ப்பணியின் பாவம் தொலையக் கோவலன் பலவகையான தானங்களைச் செய்தான். அவள் துன்பத்தை ஒழித்தான்." பத்தினி ஒருத்தியின் கணவனிடம் பழி கூறியவனை பொய்க்கரி சொல்வோரைத் தன் கரைகெழு பாரத்தாற் பற்றிப்புடைத்து உண்ணும் பூதம் அவனைப் பற்றவே அவனைப் பெற்ற தாய் கதறியதைக் கேட்ட கோவலன் அவனுக்கு பதிலாக தன் உயிரை ஏற்றுக்கொள் என்றதை பூதம் ஏற்காது கீழ்மகனைக் கொன்றது. துயருற்ற தாயுக்கும் அவனின் சுற்றத்தார்க்கும் வேண்டிய பொருளுதவியை செய்தான் கோவலன் என்பவற்றை,

**ஞான நன்னெறி நல்வரம்பு [illegible]யோன்**

Edit with WPS Office

**தானம் கொள்ளுந் தகைனயின் வருவோன் (சிலம்பு: அடைக்கலம் :40-90)**

என்ற வரிகளில் கோவலனின் சிறப்பு சமயசார்பற்ற நிலை போன்றவற்றை இதன் மூலம் காணமுடிகிறது.

**மாங்காட்டு மறையோன்**

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் காட்டு வழியாக மதுரை நோக்கிச் செல்லுகின்றனர். எதிரிலே மாங்காட்டு மறையோன் என்பவன் பாண்டியனை வாழ்த்திக்கொண்டு வருகின்றான். அவன் வைணவ பக்தன். கோவலன் "யாது நும் ஊர்? ஈங்கு என் வரவு?" என்று கேட்டான். அப்பொழுது மாங்காட்டு மறையோன் திருவரங்கத்தின் பெருமையையும் திருவேங்கடத்தின் சிறப்பையும் எடுத்துரைத்தான். அந்த மறையோனிடம் மதுரைக்குப் போக வழி சொல்லும்படி கேட்டான் கோவலன். அவன் மதுரைக்குச் செல்லும் வழிகளைப்பற்றிக் கூறினான் அவை இடப்பக்கத்து வழி, வலப்பக்கத்து வழி, நடுவழி என்பன.

அவற்றுள் இடப்பக்கத்து திருமாலிருங்குன்றம் என்னும் அழகர்மலை, அதில் உள்ள பிலம் அப்பிலத்து வழியே சென்றால் அங்குக் காணக்கூடிய புண்ணியச்சரவணம், பவகாரிணி, இட்டசித்தி என்னும் பொய்கைகள். அவற்றில் நீராடுவதால் அடையும் பயன் இவற்றையெல்லாம் விரிவாக எடுத்துரைத்தான். ஐவணவனாகிய மறையோன் கோவலனிடம் கூறியதை கோவலனும் சமணத்துறவி கவுந்தியடிகளும் பொறுமையுடன் கேட்டனர். சிலப்பதிகாரக்காலத்தில் ஒரு மதத்தினர் உரைக்கும் கொள்கைகளை பிற மதத்தினர் பொறுமையுடன் கேட்டனர். மதங்காரணமாக ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளவில்லை என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**சேரன் செங்குட்டுவன்**

சேரன் செங்குட்டுவன் ஒரு சிவபக்தன். அவன் சிவபெருமான் அருளுடன் பிறந்தவன் என்றே சிலப்பதிகாரம் சொல்லுகின்றது.

**செஞ்சடை வானவன் அருளினில் விளங்க**
**வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" (சிலம்பு:கால்கோள் : 98-99)**
**ஆன்ஏறு உயர்ந்தோன் அருளினில் விளங்க**
**மாநிலம் விளக்கிய மன்னவன் (சிலம்பு:வரந்தரு: 141-142)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது. மேலும் சேரன் செங்குட்டுவன் வடநாடு நோக்கிப் புறப்படும்போது சிவபெருமானை வணங்கிப் புறப்பட்டான் என்று கூறுகிறது சிலப்பதிகாரம். அப்படி வடநாட்டுக்குப் புறப்பட்ட சமயத்திலே மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது.

சேரநாட்டு மன்னன் வெற்றிபெறுக என்று வாழ்த்திக்கொண்டு சிலர் வந்தனர். திருவனந்தபுரத்திலே ஆடக மாடத்திலே அரவணையிலே அரிதுயில் கொண்டிருக்கும் திருமாலின் பிரசாதத்தை அவர்கள் கொண்டு வந்தனர். அதை அவர்கள் வணக்கத்துடன் அரசனிடம் அளித்தனர். அரசனும் அன்புடன் வாங்கிக் கொண்டான். கங்காதரனாகிய


Edit with WPS Office

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

சிவபெருமானுடைய அழகிய சேவடி மலரை முடியிலே சூடியிருந்தான். ஆதலால் திருமால் பிரசாதத்தை தோளிலே தாங்கிச் சென்றான்.

**குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்க! என**

**ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன் (சிலம்பு:கல்கோள்:61-67)**

செங்குட்டுவன் சிவபக்தன். ஆயினும் திருமாலையும் பணியும் பண்புள்ளவன் என்ற உண்மையை இவ்வடிகள் காட்டுகின்றன.

இச்செங்குட்டுவன் புத்த மதத்தினராகிய "தண்டமிழ் சாத்தன்" என்னும் புலவருடன் நட்புக்கொண்டிருந்தான். அவர்தான் கண்ணகியின் வீரச்செயலை செங்குட்டுவனுக்கு உரைத்தான் என்பது காட்சிக் காதையிலே காணப்படுகின்றது. சைன மதத்தைச் சேர்ந்த கோவலன் மனைவியான கண்ணகியை இச்செங்குட்டுவன் பத்தினித் தெய்வமாகப் போற்றினான். இச்செயலும் செங்குட்டுவனுடைய மத சமரசத்தையே காட்டும். இவ்வாறாக செங்குட்டுவன் சிவபக்தன்இ ஆயினும் திருமாலை வணங்கினான்; புத்த மதத்தினரிடம் நட்புப் பாராட்டினான் ; அருக மதத்தவரையும் போற்றினான். இவ்வுண்மைகளை மேலே கூறியவைகளைக் கொண்டு உணரலாம். மாதவி சைன மதத்தைச் சார்ந்தவனாகிய கோவலனுடைய காதற்பரத்தை மாதவி; கோவலன் கொலையுண்டபின் அவள் பௌத்த சன்னியாசியானாள்; தன் மகள் மணிமேகலையையும் பௌத்த சன்னியாசியாக்கினாள். தன் மணிமேகலையும் பௌத்த மதத்திலே ஈடுபடுத்தினாள் என்கிறார்.( சிலப்பதிகாரத் தமிழகம்: ப.168) சாமிசிதம்பரனார்.

**கோவலன் தந்தை மாசாத்துவான்**

கோவலன் இறந்த செய்தி அவன் தந்தை மாசாத்துவானுக்கு எட்டிற்று. தன் மைந்தனுக்கும் மருகிக்கும் நேர்ந்த துன்பத்தை அவனால் தாங்க முடியவில்லை. இல்லறத்தை வெறுத்தான் ; தனது பெரும்பொருள் முழுவதையும் தானம் செய்தான் ; பௌத்த சங்கத்தார் வாழும் இந்திர விகாரத்தை அடைந்தான். அங்கே தவம்புரிந்து கொண்டிருந்த முனிவர் முண்ணூற்றுவரை வணங்கித் துறவியானான்.

**கண்ணகியின் தந்தை மாநாய்க்கன்**

சமணமத முனிவரான ஆசீவகரை அடைந்தான். தனது செல்வம் அனைத்தையும் தானம் செய்து துறவியானான். இச்செய்திகள் நீர்படைக் காதையில் காணப்படுகின்றன.

- திருமால்: ஆய்ச்சியர் குரவையிலே திருமால்தான் உயர்ந்த கடவுளகப் போற்றப்படுகிறான்.
- முருகன்:குன்றக் குரவையிலே முருகன் தான் ஒப்பற்ற தெய்வமாகப் போற்றப்படுகின்றான்.


Edit with WPS Office

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

- சிவன்: காவிரிப் பூம்பட்டினத்துக் கோவில்களைக் குறிப்பிடும்போது, "நுதல்வழி நாட்டத்து இறையோன் கோயில்" என்று சிவன்கோவில் தான் முதலில் குறிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிலம்பு காலத்தில் தமிழகத்தில் சிவபெருமான் தான் உயர்ந்த கடவுளாகப் போற்றப்பட்டார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இச்சமயங்கள் பற்றியச் செய்தியை ச.அகத்தியலிங்கம் அவர்களும் தன் நூலில் குறிப்பிடுகிறார். (சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும், சமுதாய வரலாறும் .பக்:254-317)

## முடிவுரை

சிலப்பதிகார காலத்தில் பக்தி மார்க்கமும் அறமார்க்கமும் தமிழகத்தில் பரவியிருந்தன. இருபாலரும் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். தந்தை ஒரு மதம்இ தமயன் ஒரு மதம்இ மனைவி ஒரு மதம்இ கணவன் ஒரு மதம் என வேறு வேறு மதத்தினராயிருந்து ஒன்றுபட்டு ஒரே குடும்பமாக வாழலாம். எவருக்கும் எந்தத் தெய்வத்தையும் வணங்கவும் உரிமையுண்டு. மத ஒழுக்கமும். தெய்வ வழிபாடும் அவவர்களின் தனிப்பட்ட உரிமையாக எண்ணப்பட்டு வந்தன. மேலும் ஒரு மதத்தினர் உரைக்கும் கொள்கைகளைப் பிற மதத்தினரும் பொறுமையுடன் கேட்டனர். மதங்காரணமாக ஒருவரோடு ஒருவர் பகைத்துக் கொள்ளவில்லை. இவ்வாறு சிலப்பதிகாரக் காலத்தில் மக்கள் சமய சார்பற்றவர்களாக இருந்தனர் என்பதை இவ்வுண்மைகளைக் கொண்டு அறியமுடிகிறது. எக்காலத்திற்கும் மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்ற நோக்கத்தை உடையது சிலப்பதிகாரம். என்பது இதன் மூலம் உணரமுடிகிறது

## தொகுப்புரை

சமணமத்தைச் சேர்ந்த கோவலன் சிவனை வழிபடும் சேரன் செங்குட்டுவன், திருமால் கோவிலையும் இந்திர விகாரங்களையும் வணங்கிய செய்தியை அறியமுடிகிறது. கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரும் மாங்காடடு மறையோன் திருமாலின் மாண்பை உரைக்கும்போது அதைப் பொறுமையுடன் கேட்டனர். திருமாலை வணங்கும் மாதரியைக் கவுந்தியடிகள் மனதாரப் பாராட்டினார். அவர்களின் சொல்லை ஏற்று தன் இல்லத்தில் கண்ணகி கோவனையும் பாதுகாத்து வேண்டிய உதவிகளையும் செய்து கொடுத்தாள். மாதவியும், மணிமேகலையும் பௌத்த மதத்தைத் தழுவினர். கோவலன் தந்தை புத்தமதத்தைத் தழுவினான். கண்ணகியின் தந்தை சைனமதத்தைத் தழுவினான் போன்ற பல உண்மைகளை அறியமுடிகிறது.

## பார்வை நூல்கள்

[1] சிலப்பதிகாரம் - வேங்கடசாமி நாட்டார்,ராமையா பதிப்பகம்.சென்னை, 2008.


Edit with WPS Office

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021 Available at: www.ijtlls.com

[2] சிலப்பதிகாரம் - புலியூரக்கேசிகன்,சாரதா பதிப்பகம்,சென்னை. 2017.

[3] சிலப்பதிகாரத் தமிழகம் - சாமி சிதம்பரனார் .அறிவுப்பதிபகம், சென்னை.முதல் பதிப்பு – 2008 .

[4] சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும், சமுதாய வரலாறும். ச. அகத்தியலிங்கன். தமிழ் பல்கலைகழகம், தஞ்சாவூர், 1988.

**தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:**
**மகபுபூ & முத்துவேல். "சிலப்பதிகாரச் சமயங்கள்."** *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 3, தொகுதி 2, ஜனவரி 2021, பக்.361-367. டிஓஐ: **10.38067/ijtlls.2021.spl.v03i03v2.054**

**Cite this Article in English (MLA 8 Style) as:**
**Mahabobu & Muthuvel. "Religions in "Silappathikaram"."** *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 3, Vol. 2, January 2021, pp.361-367. DOI: **10.38067/ijtlls.2021.spl.v03i03v2.054**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement:** இல்லை /NIL

**கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement:** இல்லை /Nil

**கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Edit with WPS Office